
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 101 | 11.07.2023 (செவ்வாய்க்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## பொலிஸ், இராணுவம் கொடுக்கும் வலியைவிட சமூகம் கொடுக்கும் வலி கொடுமையானது..!

### முன்னாள் போராளி செ.அரவிந்தன் ஆதங்கம்..!

பொலிஸ், இராணுவம் கொடுக்கும் வலியைவிட சமூகம் கொடுக்கும் வலி கொடுமையானது என முன்னாள் போராளி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார். போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் முதலாவது அலுவலகமானது நேற்று முன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து மேலும் கருத்து தெரிவிக்கையில், விழுப்புண்ணால் பாதிக்கப்பட்டு தொடர்ந்தும் இன்றுவரை காயங்களோடு போராடி கொண்டிருக்கின்றவர்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது. மரணமாகி மரணச்சடங்கினை செய்வதைவிட அவர்கள் வாழ்வதற்கான ஒரு விடயத்தை முன்னெடுக்க

பக்கம் 4

## குண்டுதுளைக்காத கவசத்தை அணிந்த படி பராக்கிரமம் காட்டுகிறார் சரத் வீரசேகர

### சிறீகாந்தா காட்டம்!



பக்கம் 4

சரத் வீரசேகர எம்.பி குண்டுதுளைக்காத கவசத்தை அணிந்த படி பராக்கிரமம் காட்டுகிறார் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது சிங்கள - பௌத்த நாடு என்பதை நீதிபதிகளும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற சாரப்பட பாராளுமன்றில் சரத் வீரசேகர

## இந்திய - இலங்கை படகுச் சேவைக்கு

### புலிகளின் கப்பல்..!



இந்தியா அனுமதித்தால் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் கப்பல்களை பெறுவதற்குத் தயாராக இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்

## இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வழிக்குக் கொண்டு வரும் வாய்ப்பு இந்தியாவிற்குள்ளது! கஜேந்திரன் எம்.பி.

வல்லரசு என்ற வகையில் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வழிக்குக் கொண்டு வரும் வாய்ப்பு இந்தியாவிற்குள்ளது. குறித்த சந்திப்பின் போது 75 வருடங்களாக தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சிக்குள் எட்டப்பட முடியாது. எனவே தீர்வு தொடர்பில் அழுத்தங்களை இந்தியா மேற்கொள்ள வேண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழர்கள் விடயத்தில் இந்தியா காத்திரமான முடிவை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்திய பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.



பக்கம் 4

## புலம்பெயர் உறவுகளிடம் செல்வம் எம்.பி. முன்வைத்துள்ள கோரிக்கை..!



புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்கள் போராளிகளுக்கு உதவி செய்வதாக இருந்தால் போராளிகள் நலன்புரி சங்கத்திற்கு உதவி செய்யுங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பக்கம் 4

## இலங்கையிடம் கேள்வி எழுப்புங்கள் : ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளிடம்

### சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் வலியுறுத்தல்

தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கை மேலும் ஆழப்படுத்தக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கையிடம் கேள்வி எழுப்ப வேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளன.

அதில் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு: இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான

பக்கம் 4

## வீரசேகரவின் இன, மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரை!

### அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம்!





பக்கம் 5

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகராவின் மிக மோசமான இன மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. அண்மையில் குருந்தூர் மலை சட்டவிரோத நீதிமன்ற உத்தரவை மீறிய கட்டுமானத்தை பார்வையிட முல்லைத்தீவு நீதிபதி களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இவ் வழக்குடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கொழும்பு மாவட்ட

## களத்தில் இறங்கி போராடும் தமிழ் அரசியல் தலைவர்களை

### அச்சுறுத்தும் அரசு..! தம்பிராசா காட்டம்..!



பக்கம் 5

தொழிலார்களிற்கு எதிராக சட்டத்தை உருவாக்கி அவர்களை நிர்கதி நிலைமைக்கு அரசாங்கம் தள்ளுமானால் அடக்கு முறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு அவர்களின் நலன்களை முன்னிறுத்தி வீதியில் இறங்கி போராடும் என அதன் தலைவர் மு.தம்பிராசா தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

ஏற்கனவே அரசாங்கம் ஊடகங்களிற்கு எதிரான சட்டத்தினை கொண்டு வந்து ஊடக நிறுவனத்தை அடக்கி ஆழ முனையும் அதேவேளை பயங்கரவாத தடை சட்டத்திற்கு இணையான மற்றும் அதையும் விட மேலதிகமான சட்டத்தினை கொண்டு வந்து மக்களையும் அடக்கி ஆழ

# இந்திய இழுவைப் படகுகளை தடைசெய்ய தமிழ் கட்சிகள் ஓரணியில் வலியுறுத்த வேண்டும் - மீனவ அமைப்புக்கள் கோரிக்கை!




இந்தியா செல்லும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எல்லைதாண்டிய இந்திய இழுவைப் படகுகளை தடை செய்யுமாறு தமிழ் கட்சிகள் ஓரணியில் வலியுறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட கடற்தொழில் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்களை இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றபோது அதில் பேசப்பட்ட விடயங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம்.

அதில் குறிப்பிடும் போது 13 வது திருத்தச் சட்டம் தமிழரின் இனப் பிரச்சனை மற்றும் முல்லைத் தீவு புதைகுழி விவகாரம் தொடர்பில் பேசப்பட்டது.

நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்ல உள்ள நிலையில் பதின்மூன்று தொடர்பில் இந்திய பிரதமருக்கு தமிழ் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

மீனவ சங்கங்களாகிய நாம் ஒன்றை கேட்க விரும்புகிறோம் இந்திய எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் எமது மீனவர் பிரச்சினை மற்றும் எல்லை தாண்டிய இந்தியா இழுவைப் படகுகளை தடை செய்வது தொடர்பில் இந்திய பிரதமருக்கு விதமான கடிதங்களும் அனுப்புவதாகத் தெரியவில்லை.

தமிழ் கட்சிகளிடம் நாம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம் எமது மீனவ சமூகம் தொடர்ச்சியாக இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்தியா இழுவைப்படகுகளை கடற்படை கைது செய்துவரும் நிலையில் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ச்சியாக எல்லை தாண்டிய இந்திய ரோலர்களை கைது செய்ய வேண்டும்.

இன் நிலையில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்டவிரோத எல்லை தாண்டிய இந்தியா ரோலர்களை கைது செய்வதற்கான அழுத்தங்களை தொடர்ச்சியாக இலங்கை கடற்படைக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் ஆவதற்கு போதிய கால அவகாசம் இருக்கின்ற நிலையில் தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று எமது பிரச்சனை தொடர்பில் இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்ப வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் யாழ். மாவட்ட கடைதொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோணிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ண குமார் மற்றும் வடமராட்சி வடக்கு கடை தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் செல்லத்துரை நற்குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு!





முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளம்பில் வடக்கு பகுதியில் நீதிமன்ற அனுமதியுடன் விசேட அதிரடிப் படையினரால் வெடிபொருட்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

நேற்று திங்கட்கிழமை (10) காலை விசேட அதிரடிப் படையினரால் குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் பெரிய பரா-13,சின்ன பரா - 01, 82MM மோட்டார் - 49,60MM மோட்டார் - 01,ஆர் வி ஜி - 6, கைகுண்டு- 56, தோட்டாக்கள் ஒரு தொகை என பல தொகை வெடிபொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகோரி அக்கரைப்பற்றில் போராட்டம்!

விவசாயிகளின் சமகாலப்பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகோரி அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச விவசாய அமைப்புக்கள் இணைந்து திங்கட்கிழமை (10) மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அக்கரைப்பற்று மணிக்கூட்டுக்கோபுரம் முன்பாக ஒன்றிணைந்து பல்வேறு சுலோக அட்டைகளை தாங்கி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்திய விவசாயிகள் பேரணியாக அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியூடாக சின்னப்பள்ளிவரை சென்று அங்கிருந்து ஆலையடி வேம்பு பிரதேச செயலகம் வரை சென்றனர்.

பிரதேச செயலகம் முன்பாக தமது எதிர்ப்பினை வெளியிட்ட விவசாயிகள் அங்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரனிடமும் உதவிப்பிரதேச செயலாளர் ஆர்.சுபாகரிடமும் கோரிக்கை அடங்கிய மகஜர்களையும் கையளித்தனர்.





சிறுபோக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நெற்செய்கைக்கான உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதுடன் விளைச்சல் குறைவடைந்தமையினால் தாம் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் அரசினால் வழங்கப்பட்ட மானியப்பணமும் பணமாக வழங்கப்படாமல் வவுச்சர் மூலமாக வழங்கப்பட்டு கண்துடைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர்.

இதனை கண்டித்தும் நெல்லின் உத்தரவாத கொள்வனவு விலையினை கிலோ ஒன்றிற்க 100 ரூபாவும் காய்ந்த ஈரப்பதனற்ற நெல்லினை 120 ரூபா வரை அதிகரித்து விவசாயிகளின் முழு உற்பத்தியையும் அரசு நெற்சந்தைப்படுத்தும் அதிகார சபை மூலம் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

இதேநேரம் தனியாரும் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் மானிய பணத்தை பணமாக வழங்கவும் அல்லது விவசாயிகள் விரும்பும் உரத்தை கொள்வனவு செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

எதிர்காலத்தில் பெரும்போக செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவதானால் உரம் களைநாசினி பூச்சிநாசினி போன்றவற்றின் விலையினை குறைத்து உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அரிசி இறக்குமதியை நிறுத்தி நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளை காப்பாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இப்போரட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் கருத்து வெளியிட்டதுடன் அதிகளவான விவசாயிகள் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததுடன் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

# பலர் எதிர்பார்த்தபடி பொருளாதார நெருக்கடி இலங்கையின் முதுகெலும்பை முறிக்காதது ஏன்?

## நோர்வேயின் முன்னாள் அமைச்சர் சொல்ஹெய்ம் விளக்கம்



இலங்கை மக்களிற்கே உரிய மிக கடினமான நெருக்கடிகளில் இருந்து மீளும்திறன் காரணமாக கடந்த வருடத்தின் பொருளாதார நெருக்கடி இலங்கையின் முதுகெலும்பை முறிக்கவில்லை என நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இணையவழி நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் அசாதாரண பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளை அது இலங்கை மக்களின் முதுகெலும்பை முறிக்கும் என பலர் நினைத்தனர் என எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை மக்களிற்கே உரிய மிகவும் நெருக்கடியிலிருந்து மீளும் திறன் காரணமாக இது சாத்தியமாகவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்காரணமாக இலங்கையால் அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு முன்னோக்கி செல்வது குறித்து சிந்திக்க முடிகின்றது எனவும் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலை உருவாகுவதற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவினதும் ஏனையவர்களினதும் தலைமைத்துவமே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அற்புதமான தீவுக்கான மகத்தான வாய்ப்புகளை ஆராயும் தருணம் தற்போது வந்துள்ளது மீள்புதுப்பிக்கத்தக்க சக்திதுறைமற்றும் சுற்றுலாத்துறை ஆகியன அதிக திறன் கொண்ட துறைகளாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழர் ஒருவருக்கு கனடாவில் கிடைத்த கௌரவம்!



கனடா தேசிய கராத்தே சுற்றுப்போட்டி 2023 இன் மத்தியஸ்தராக இலங்கை தமிழர் எஸ். மனோகரன் பங்கேற்றுள்ளார்.

கனடாவின் தேசிய கராத்தே சுற்றுப்போட்டி - 2023 கியூபெக் மாநிலத்தின் லவாலில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கனடாவின் பல மாநிலங்களில் வெற்றி பெற்று தெரிவான வீர, வீராங்கனைகள் இந்த போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

அதில் இலங்கை தமிழரான எஸ்.மனோகரன் கனடா தேசிய மத்தியஸ்தர் தரத்தில் சித்தியடைந்து, இந்த சுற்றுப்போட்டியில் மத்தியஸ்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

இந்நிலையில் இலங்கைத் தமிழர் ஒருவருக்கு இந்த கௌரவம் கனடா வாழ் இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி புலம் பெயர் ஈழத்தமிழர்களும்மும் மகிழ்ச்சியியை ஏற்படுத்தியுள்ளது.

# மலையகத்தில் நாடகமொன்றை மேடையேற்ற முயன்றவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

## இராணுவம் அனைத்து தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்ப்பதை வெளிப்படுத்துகிறது : அம்பிகா சற்குணநாதன்



மலையகத்தில் நாடகமொன்ற மேடையேற்ற முயன்றவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது, இராணுவம் அனைத்து தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்ப்பதையே வெளிப்படுத்துகிறது என தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், ஆழமாக வேரூன்றியுள்ள இராணுவமயமாக்கலை இது புலப்படுத்துகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை அவர் தனது டுவிட்டர் பதிவிலேயே குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் மேலும் இடம்பெறுவதாவது:

கருத்துச் சுதந்திரத்தையும் உடன்பட மறுப்பதையும் ஒடுக்குவதற்காக சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்படும் இராணுவம், அனைத்து தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்ப்பதை மலையகத்தில் இடம்பெற்ற இந்த சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் இராணுவமயமாக்கல் என்பது ஆழமாக வேரூன்றியுள்ளது.

கொட்டியாகல தேயிலை தோட்டத்தில் ராசையா லோகநாதன் என்பவர் கடந்த 7ஆம் திகதி நாடகமொன்றை மேடையேற்ற திட்டமிட்டிருந்தார்.

குறிப்பிட்ட தோட்ட முகாமையாளர்கள் பொலிஸாருக்கு வழங்குவதற்கென கடிதமொன்றை தருமாறு ஏற்பாட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

6ஆம் திகதி லோகநாதன் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். அங்கு அவரிடம் அடையாள அட்டை இலக்கம், நாடகத்தில் நடிப்பவர்களின் விபரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட விபரங்களை கேட்டுள்ளனர்.

அதற்கு லோகநாதன் ஏன் என கேள்வி எழுப்பியவேளை, பாதுகாப்பு வழங்குவதற்காக என பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், குறிப்பிட்ட நாடகம் தொடர்பில் இராணுவம் விசாரிப்பதாக ஏற்பாட்டாளர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. ஏற்பாட்டாளர்கள், “இராணுவம் அச்சுறுத்தியதா“ என தோட்ட நிர்வாகத்தினரிடம் கேட்டுள்ளனர். “அச்சுறுத்தவில்லை ஆனால், நாடகம் குறித்து விசாரித்தனர்“ என தோட்ட நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து, 7ஆம் திகதி மௌசாகலை இராணுவ முகாமிலிருந்து சுரேஸ் என்ற அதிகாரி லோகநாதனை தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ளார். அவருக்கு லோகநாதனின் அடையாள அட்டை இலக்கம் தெரிந்துள்ளது.

முகநூலில் நாடகம் குறித்த விபரங்களை பார்த்ததால் மேலும் தகவல்களை பெற விரும்புவதாக அவர் லோகநாதனிடம் தெரிவித்துள்ளார்.

அப்போது மலையகத்தில் நாடகங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வது இராணுவத்தின் கடமையா என லோகநாதன் கேட்டுள்ளார்.

அதற்கு, அந்த இராணுவ அதிகாரி, நாடகத்தை நடத்துவதற்கு பொலிஸாரின் அனுமதி கிடைத்துள்ளதால் நாங்கள் எந்த பிரச்சினையும் தரப்போவதில்லை எந்த பிரச்சினையும் வராது என கூறியுள்ளார்.

இது குறித்து, இராணுவ பேச்சாளரிடம் கேட்டபோது அவர், “இதனை என்னால் உறுதி செய்யமுடியாது பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுங்கள்“ என தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர், மௌசாகலை இராணுவ முகாமை சேர்ந்த கேர்ணல் சிவா என்பவர் “பல சம்பவங்கள், நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அவற்றுக்கு புலம்பெயர் அமைப்புகள் நிதி வழங்குகின்றன“ என தெரிவித்துள்ளார்.

அத்தோடு, “சமீபத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலையகத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அவ்வாறானவர்கள் விஜயம் மேற்கொண்டால் அவர்களின் பாதுகாப்புக்காக எங்களுக்கு அறிவிக்கவேண்டும்“ என்ற அந்த அதிகாரி, விடுதலைப்புலிகளின் கொள்கை மலையகத்திலும் பரவவேண்டுமா என்றும் கேட்டுள்ளார்.

குறிப்பிட்ட அதிகாரி, தமிழ் கட்சிகள் மலையகத்துக்கு விஜயம் மேற்கொள்வது குறித்து கரிசனை வெளியிட்டுள்ளதுடன், அங்கு இடம்பெறும் அனைத்து நிகழ்வுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

“பொதுமக்களுக்கு குழப்பம் விளைவிக்காமல் நாங்கள் அதனை செய்வோம்“ என்ற அந்த அதிகாரி, அந்த குழுவின் மத்தியில் புலனாய்வாளர்கள், இராணுவத்தினர் இருப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் செயற்பாடுகள் சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்றன. கண்ணுக்கு தெரியாத மற்றும் அறியப்படாத வழிகளில் அதிவேகமாக வளர்ந்த இராணுவம் சட்டத்தினால் வழங்கப்படாத, ஜனநாயகத்துக்கு விரோதமான சட்டங்களை பயன்படுத்தலாம் என நினைக்கிறது. ஆனால் தென்னிலங்கையின் எந்தவொரு அரசியல் கட்சியும் இது குறித்து கேள்வி எழுப்பாது என அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

# தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா கட்டாயம் பங்களிக்க வேண்டும்

## மலையக மக்களின் பிரச்சினை குறித்து மோடிக்கு நாம் கடிதம் அனுப்புவோம் : மனோ கணேசன்

இலங்கையிலுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின்போது, வெறுமனே விருந்தோம்பலை மாத்திரம் வழங்காமல், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேச வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுமாறு வலியுறுத்தி தாமும் கடிதமொன்றை எழுதவுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (09) வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

இலங்கை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பெரும் கடமையும், கட்டுப்பாடும் உள்ளது. இலங்கை அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர்.



எனவே, இலங்கையில் காணப்படும் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர் பேச வேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்கள் சார்பில் அங்குள்ள அரசியல் தலைவர்கள் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளதைப் போன்று மலையக மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணிலுடன் பேசுமாறு வலியுறுத்தி நாமும் கடிதம் எழுதுவோம்.

ஊழல் ஒழிப்பு சட்ட மூலமானது, கடந்த காலங்களில் அரச சொத்துக்களை கொள்ளையிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும், அவர்களால் கொள்ளையிடப்பட்டு வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீள நாட்டுக்கு கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும். ஆனால், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்ட மூலத்தில் அவ்வாறு எதுவும் இல்லை.

இது அந்த சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடாகும். எனவே, நாம் இவ்விடயத்தில் அதிருப்தியுடன் இருக்கின்றோம். கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழி காட்ட வேண்டும்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தொடர்பில் இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு உண்மையில் விசாரணைக்குழுவல்ல. அது முட்டாள் குழுவாகும். கோழியைப் பாதுகாக்கும் பொறுப்பு நரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைப் போன்று தான் இந்தக் குழுவின் நியமனமும். நாடு வங்குரோத்தடைய பிரதான காரணம் ராஜபக்ஷ அரசாங்கம் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வாறிருக்கையில், ராஜபக்ஷக்களின் கட்சியின் பொதுச் செயலாளர் தலைமையில் குழுவொன்றை அமைத்து, நாடு வங்குரோத்தடைய யார் காரணம் என வினவினால் அவர் யாரைக் கூறுவார்?

எனவே அக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிலிருந்து விலக வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன். அவர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்றார்.

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

## குண்டுதுளைக்காத கவசத்தை...

ஆற்றியஉரை குறித்து சிறீகாந்தா விடுத்த அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்,

“குருந்தூர்மலை ஆலய விவகாரம் என்பது, முல்லைத்தீவு நீதிமன்றத்தின் முன்னால் ஒரு வழக்காக இப்போதும் இருக்கையில், அந்த வழக்கு தொடர்பான விடயங்களை பிரஸ்தாபித்தும் நீதிபதியின் நடவடிக்கைகளை விமர்சித்தும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர மிக மோசமான இனவாத கருத்துகளை தனது சிறப்புரிமை என்கின்ற குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி பாராளுமன்றத்தில் வெளியிட்டிருப்பது மிக மட்ட ரகமான கோழைத்தனமாகும்.

ஒரு நீதிபதியின் கடமைவழி நடவடிக்கைகளைப் பற்றி பிரஸ்தாபித்து விவாதிப்பதானால், அதற்கென தனியான ஒரு பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட வேண்டும்.

அதை செய்ய முயற்சிக்காமல், பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து, வக்கிரம் நிறைந்த இனவாத சிந்தனையை சரத்வீரசேகர பாராளுமன்றில் கக்கியிருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் மிகக்குறைவான உறுப்பினர்கள் சமூகமளித்திருந்த சூழ்நிலையில், தனது பராக்கிரமத்தை தனக்கே உரிய பாணியில் சரத்வீரசேகர நிரூபிக்க முயன்று ஒட்டுமொத்த நீதித் துறையின் சுதந்திரத்துக்கும் சவால் விடுத்திருக்கின்றார்.

இது எப்படி அனுமதிக்கப்பட்டது என்பது ஆச்சரியமளிக்கின்றது. இந்த விடயத்தில், நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி மோதல்களையும் இன, மத வேறுபாடுகளையும் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு, பொறுப்புணர்ச்சியோடு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

நாட்டின் சகல சட்டத்தரணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த விவகாரத்தில் தகுந்த நடவடிக்கைகளை விரைவாக எடுக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது.

## பொலிஸ், இராணுவம் கொடுக்...

விரும்புகின்றோம். தற்போது இலங்கையிலே பதின்னான்காயிரத்திற்கு மேற்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளும் கண்காணிப்பிலே இருக்கிறார்கள் என்று கூறக்கூடிய ஐயாயிரம் தொடக்கம் ஆறாயிரம் போராளிகளும் அண்ணளவாக இருபதாயிரம் போராளிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து இதே சமூகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இங்கே இருக்கின்ற போராளிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் மேலெழுந்து வந்திருந்தாலும் அனேகமானவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழும், வாழ்வாதாரத்திற்காக போராடுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையை போராளிகளுக்கு செய்யாததால் இன்றுவரை தமது வாழ்க்கைக்காக போராடிக்கொண்டு இருக்கின்ற சமூகமாகவே இருக்கின்றோம்.

இனிமேலாவது போராளிகளுடைய புறக்கணிப்புக்கள் அல்லது வேற்றுமைகளை கடந்து தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமானதொரு சேவையை ஆற்ற வேண்டிய கடப்பாட்டை உணர்ந்து போராளிகளை முதலில் சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொலிஸ், இராணுவம் அடக்குமுறைகள் அத்தோடு உளவியல் ரீதியான தாக்கத்தை விட சமூக ஒடுக்குதல்களாலே பாதிக்கப்படுகின்ற தன்மை வலி அதிகளவாகவே இருக்கின்றது.

இராணுவம், பொலிஸ் திணைக்களங்களோடு போராடுகின்ற அதேநேரம் எங்களுடைய சொந்த மக்களோடும் , சமூகத்தோடும் போராடுகின்றவர்களாகவே இருந்து வருகின்றோம்.

எனவே இவ்வாறான ஒரு நிலையிலே எமது எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்று சிந்திக்காமல் போராளிகளது நலனையும் , சமூகத்தினுடைய நலனையும் கருத்தில் கொண்டு போராளிகள் நலன்புரிச்சங்கத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

போராளிகள் நலன்புரி சங்கத்திற்கு பொதுமக்கள், போராளிகள் அனைவரது ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். முதலாவது காரியாலயம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் காரியாலயம் திறந்து வைக்கப்படும் என்பதோடு எங்களுடைய பணி தமிழீழ விடுதலை புலிகளது கட்டமைப்பிலே என்னென்ன விடயங்கள் இருந்ததோ ஆயுதம் , போர் போன்ற விடயங்களை தவிர அவ்வளவு விடயங்களும் போராளிகள் நலன்புரி சங்கத்திலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது என மேலும் தெரிவித்தார்.

## இலங்கை மீது அழுத்தங்களைப்...

நேற்றையதினம் யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் குறித்த மகஜர் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செ. கஜேந்திரன் கையளித்தார்.

அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் நாட்களில் இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்குச் சென்று இந்தியப் பிரதமரைச் சந்திக்கவுள்ளார். இலங்கையானது பொருளாதார ரீதியாக பாதாளத்தில் வீழ்ந்துள்ள நிலையில் இந்தியா பெருமளவு உதவிகளை வழங்கியிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்திடம் விரைவாக கடனைப் பெறுவதில் இந்தியா உதவி புரிந்துள்ளது.

வல்லரசு என்ற வகையில் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வழிக்குக் கொண்டு வரும் வாய்ப்பு இந்தியாவிற்குள்ளது. குறித்த சந்திப்பின் போது 75 வருடங்களாக தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சிக்குள் எட்டப்பட முடியாது. எனவே தீர்வு தொடர்பில் அழுத்தங்களை இந்தியா மேற்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற வகையிலே 36 வருடங்களுக்கு முன் கொண்டுவரப்பட்ட 13ம் திருத்தச்சட்டம் தமிழர்களுக்கான தீர்வின் ஆரம்பமுமல்ல தீர்வுமல்ல என்பதைத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

இதேவேளை 13ம் திருத்தச்சட்டத்தில் மாகாணசபைக்கு அதிகாரங்கள் உண்டென அதிகாரங்களை உபயோகிக்க முற்பட்டபோது நாட்டின் பல்வேறு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 30 க்கு மேற்பட்ட வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்திலுள்ள நிலைமையை விட மிக மோசமான அடக்குமுறைக்குள் தான் தமிழர்களின் இன்றைய நிலையுள்ளது.

குறித்த சட்ட மூலத்தை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளுமிடத்து ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டதாக அரசு கருதி இனப்படுகொலை ஏற்படவில்லையென உலகளவில் எடுத்துக்கூற வழிகாட்டும்.

அந்த வகையில் 1989 இந்தியா தலைமையில் நடைபெற்ற திம்பு மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஸ்டித் தீர்வை எட்டுவதற்கு இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டை ஏற்கனவே நிராகரித்து வந்துள்ளோம். 13 ம் திருத்தச்சட்டத்தில் மாகாணசபைக்கு அதிகாரங்கள் உண்டென அதிகாரங்களை உபயோகிக்க முற்பட்ட போது நாட்டின் பல்வேறு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 30 க்கு மேற்பட்ட வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டது

13ம் திருத்தச்சட்டத்தை ஆதரித்தால் மக்கள் மத்தியில் எதிர்ப்பை சம்பாதிக்க நேரிடும் என்பதால் நடைமுறைப்படுத்தல் என்ற வார்த்தையை தந்திரோபாயமாக உபயோகித்து வருகின்றனர்.

ஏனைய தரப்புகள் இந்தியாவின் நலனுக்காகவும் தேவைக்காகவும் இச் சட்டத்தை தீர்வாக வலியுறுத்தும் அடிப்படையில் தமிழ் மக்களின் பெயரால் வலியுறுத்துகின்றார்கள்.

இதேவேளை சம காலத்தில் மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக பேசப்படுகின்றது. இது தொடர்பில் கடந்த காலங்களில் போராட்டங்கள் போன்ற நடவடிக்கைளில் ஈடுபட்டதுடன் தற்போதும் அப் பிரச்சானைகள் தொடர்பான தீர்வுகளில் கரிசனையாக உள்ளோம். என்றார்.

## இந்திய - இலங்கை படகுச்...

போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தென்னிந்தியாவுக்கும் (பாண்டிச்சேரி) காங்கேசன்துறைக்கும் (கே.கே.எஸ்) எந்த நேரத்திலும் படகுச் சேவையை தொடங்க இலங்கை தயாராக இருக்கின்றது.

ஆனால் இந்தியா அனுமதி வழங்காததால் தான் இந்த சேவையை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒரு கூட்டுக் குழு உள்ளது.

இந்தியாவுடன் எங்களுக்கு கிடைத்த சமீபத்திய தகவல்களின்படி, அவர்கள் படகு சேவையை மட்டுமே தொடங்க முடியும் என சொன்னார்கள். தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திலிருந்து, வேறு எந்த துறைமுகத்திலிருந்தும் அல்ல.

இந்தியாவுடனான பாதுகாப்பு மதிப்பீட்டின்படி, இலங்கைக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இந்த திட்டத்திற்கு யார் ஒப்புதல் அளித்தாலும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்வோம்.

படகு நடத்துநர்கள் இந்திய அரசாங்கத்தைத் தொடர்புகொண்டு, தங்களின் நற்சான்றிதழ்கள் மற்றும் அவர்களின் உண்மையான தன்மையை நிரூபித்து, நாகப்பட்டினத்திலிருந்து படகு தொடங்குவதற்கு இந்தியாவிடம் அனுமதி பெற வேண்டும்.

இந்திய அரசாங்கம் பச்சை கொடி காட்டிய தருணத்திலிருந்து, எந்தவொரு கப்பலையும் அல்லது ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்கு நாங்கள் அனுமதி வழங்குவோம்.

படகு நடத்துனர்களை இந்தியாவிற்கு வந்து படகு நடத்துனர்களாக அங்கீகரிக்குமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார். படகு நடத்துனர்களிடம் இருந்து பதினைந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கூறினார்.

இந்தியாவில் சில தெரிவு நடைமுறைகள் இருக்கும். படகு நடத்துனர்களுக்கான 15 விண்ணப்பங்களையும் இந்திய அரசாங்கம் அங்கீகரித்தால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் எங்களுக்கு படகு சேவை வேண்டும்.

கே.கே.எஸ் துறைமுகத்தில் பயணிகள் முனையம் மற்றும் பிற வசதிகளை நாங்கள் அமைத்துள்ளோம்.”என கூறியுள்ளார்.

## புலம்பெயர் உறவுகளிடம்...

போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் முதலாவது அலுவலகமானது ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து மேலும் கருத்து தெரிவிக்கையில்,

போரிலே பல உயிர்களை தியாகம் செய்த போராளிகளின் மதிப்பு, மரியாதை இழந்து நிற்கின்ற ஒரு தேசத்திலே சமூகங்கள் எங்களை புறக்கணிக்கின்ற நிலை தொடர்ந்து இருக்கின்றது.

தங்களை அர்ப்பணித்தவர்கள் எங்களுடைய சமூகத்தினாலே ஒதுக்கப்படுகின்ற அவல நிலை என்பது என்றுமே ஈடு செய்ய முடியாத துக்கமான நிலையாக தான் இருக்கும்.

போராளிகள் இன்றும் சொல்லொண்ணா துன்பத்தோடு வறுமையில் வாடுகின்ற நிலை காணப்படுகிறது. போராளிகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களை எங்களுடைய சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திட்டமிட்ட புலனாய்வுத்துறை, இராணுவம், பொலிஸார் முப்படைகளும் தொடர்ந்து போராளிகளை விசாரணை செய்யப்படும் போது சமூகத்திடம் ஒரு அச்சம் வருகின்றது.

இவர்கள் தொடர்ந்தும் இவ்வாறு தான் பார்க்கபடுவார்களா?, எங்களுக்கும் அந்த ஆபத்து வருமா? என்றெல்லாம் நினைக்கின்ற அளவிற்கு இந்த புலனாய்வுத்துறை, முப்படைகளும் இப்போதும் போராளிகளை ஒதுக்க வைக்கின்ற திட்டமிட்ட செயலாக செய்து வருகின்றார்கள்.

பல அரசசார்பற்ற நிறுவனங்கள், அமைப்புக்கள் உருவாகி பல உதவிகளை செய்து வருகின்றார்கள். ஆனால் அவ் உதவிகள் முழுமையாக போராளிகளுக்கு சென்றடைவதாக அறியவில்லை.

புலம்பெயர் உறவுகளிடம் ஊடகங்கள் ஊடாக ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். உதவி செய்வதாக இருந்தால் போராளிகள் நலன்புரி சங்கத்திற்கு உதவி செய்யுங்கள்.

ஏனென்றால் அவர்களுக்கு தான் தெரியும் எங்கெங்கு போராளிகள் கஷ்ரப்படுகிறார்கள், எங்கே அவர்கள் மோசமான நிலையில் உள்ளார்கள் என்பது இவர்கள் தான் அதனை காணக்கூடியதாக இருக்கும்.

உலகத்திலே பல இடங்களிலே எங்களுடைய உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பேசுவதெல்லாம் போராட்டம், போராளிகளை பற்றியே கதைக்கிறார்கள்.

அவர்கள் ஒரு குடும்பத்தில் இருந்து ஒரு ரூபா போடுவார்களாக இருந்தால் போராளிகள் யாரிடமும் கையேந்தாத ஒரு சூழல் உருவாகும்.

ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபாய் கொடுத்தாலே போதும் மனதால், உடலால் பாதிக்கப்பட்டு புனித நோக்கத்திற்காக சென்ற போராளிகள் இன்று மோசமாக கஸ்ரப்படுகின்ற ஒரு நிலையை போக்க முடியும்.

எங்களுக்கு கிடைக்கும் உதவிகள் அனைத்தும் இனி போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஊடாகவே செய்ய வேண்டும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

தனியாக அழைத்து கொடுப்பதை விட அனைவரும் பயனடையக்கூடிய வகையில் இந்த சங்கம் செயற்படும் என்று நம்புகின்றோம்.

நிச்சயமாக உங்களுக்காக குரல் கொடுப்போம். நாமெல்லாம் ஆயுதம் ஏந்திய வர்கள், போராடியவர்கள் எங்களுக்கு முன்னாலே பல நண்பர்களை இழந்திருக்கின்றோம்.

அவர்களுடைய உடலை கொண்டு செல்ல முடியாது திண்டாடியிருக்கின்றோம். அவ்வாறு போராடியவர்கள் இன்று சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற நிலை மிகவும் வேதனையான விடயம் என மேலும் தெரிவித்தார்.

## இலங்கையிடம் கேள்வி எழுப்...

நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றும், அதனை முன்னிறுத்தி நம்பகத்தன்மை வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்கியதுமான நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கப்பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் இலங்கை தொடர்பான உலகளாவிய காலாந்தர மீளாய்வின் போது நெதர்லாந்து, ஜேர்மனி, நியூஸிலாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பரிந்துரைத்திருப்பது குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இருப்பினும் இப்பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த நிராகரிப்பானது கடந்தகால மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாட்டையே காண்பிக்கின்றது.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட முன்னைய கட்டமைப்புக்களை ஒத்ததாகத் தற்போது ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யத் தவறியிருக்கின்றது.

பொறுப்புக்கூறல் தொடர்பில் மேலும் பல கேள்விகளைத் தோற்றுவிக்கக்கூடியவகையில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள (முன்னைய யுத்த வலயத்தில்) மனிதப்புதைகுழியானது பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் பதற்றத்தை மேலோங்கச்செய்திருக்கும் பின்னணியிலேயே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது குறித்துப் பேசப்படுகின்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் இன்னமும் வெளியிடப்படவில்லை. குறிப்பாக உலகளாவிய காலாந்தர மீளாய்வின்போது சில நாடுகளால் முன் மொழியப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமையை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகமானது “குற்றவியல் விசாரணையை“ வலியுறுத்தும் என்பதற்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை என்றே தோன்றுகிறது. குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான பதிலீடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதென்பது சர்வதேச நியமங்களுக்கு முற்றிலும் முரணானதாகும் என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடல்ல

## சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் : மஹிந்தானந்த அளுத்கமகே



இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிய நாடல்ல. இது அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சொந்தமானது. எனவே, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதோடு, அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தினார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை மறந்துவிட வேண்டாம் என்று கடந்த வாரம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். அவரின் இந்த கருத்து நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தல் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போது, சரத் வீரசேர பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளங் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மஹிந்தானந்த அளுத்கமகேவின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய ஒரு சில சிங்கள பௌத்த மக்களுக்காக மாத்திரம் பேசி அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்கின்றனர். வேறு சிலர் அடிப்படைவாதத்துக்கு சார்பான கருத்துக்களை முன்வைத்து அவர்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவாகின்றனர்.

இவ்வாறானவர்கள் இலங்கையில் பல்வேறு இனங்களையும், மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் வாழ்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மக்கள் பிரதிநிதிகள் தேசிய ஒற்றுமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். எனது தொகுதியான நாவலப்பிட்டியில் அனைத்து இன மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நான் தலைமை வகிக்கின்றேன்.

அவ்வாறிருக்கையில், இது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கருதுவது தவறு. அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையுடன் வாழ நாம் பழக வேண்டும்.

இலங்கை அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடாகும். எனவே சரத் வீரசேகர தெரிவித்த கருத்து அவரது தனிப்பட்ட நிலைப்பாடேயன்றி, அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. இது தொடர்பில் எவரும் வீணாக கலவரமடையத் தேவையில்லை என்றார்.

# தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த

## இந்திய மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் : டக்ளஸ்



இலங்கை கடல் பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே அன்றி, இலங்கை கடற்படையினர் அல்ல என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக தலைவர்களுக்கும் - மக்களுக்கும் தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி எல்லை தாண்டி சட்ட விரோத தொழில் முறையான இழுவைமடித் தொழிலை மேற்கொண்டிருந்த நிலையில், 15 தமிழக கடற்றொழிலாளர்களும் இரண்டு மீன்பிடிப் படகுகளும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தமிழக ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தவறானவை எனவும், இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவே எல்லை தாண்டி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்ப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுள்ளார்.

மேலும், குறித்த கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தார்மீக கடமையை வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் எனவும், தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய மத்திய - மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடல் பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே அன்றி, இலங்கை கடற்படையினர் அல்ல என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக தலைவர்களுக்கும் - மக்களுக்கும் தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி எல்லை தாண்டி சட்ட விரோத தொழில் முறையான இழுவைமடித் தொழிலை மேற்கொண்டிருந்த நிலையில், 15 தமிழக கடற்றொழிலாளர்களும் இரண்டு மீன்பிடிப் படகுகளும் நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தமிழக ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தவறானவை எனவும், இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவே எல்லை தாண்டி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்ப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுள்ளார்.

மேலும், குறித்த கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தார்மீக கடமையை வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் எனவும், தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய மத்திய - மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

### வீரசேகரவின் இன, மத துவேசத்...

எம்பியான சரத் வீரசேகர  தனது குழுவினருடன் குருந்தூரில் பிரசன்னமாகி இருந்தார்.

வழக்குடன் தொடர்புபடாத வெளிநபர்கள் சம்பவ இடத்தில் கருத்துகளை தெரிவிப்பதை நீதிபதி தவிர்க்குமாறு கூறியிருந்தார்.

இந்த நிலையில்  நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தன் பேரினவாத அடக்குமுறை சித்தாந்தத்தை பிரதிபலித்து மிக மோசமாக நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் சரத் வீரசேகரா உரையாற்றி உள்ளார்.

தமிழ் நீதிபதி என விளித்து அச்சுறுத்தும் எச்சரிக்கை வசனங்களை குறிப்பிட்டமை மிக மோசமான இனவாதம் ஆகம்.

அது மட்டுமன்றி நீதிமன்றத்தின் உயரிய மாட்சிமைக்கு பங்கம் விளைக்கும் அதி தவறான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்த வழிகோலுகின்ற வகையில் அமைந்திருக்கின்றது.

மேலும் ஆதி காலம் தொட்டு தமிழர்களால் வழிபடப்பட்டு வந்த ஆதி சிவன் கோவிலின் திரிசூலம் பற்றியும் மிகத்தவறான கருத்துக்ளை பதிவு செய்துள்ளார்.

இங்கு ஆயிரம் வருடங்களிற்கு முன்னதாகவே மிகத் தொன்மையான ஆதி சிவன் கோவில் அமைந்திருந்தையும் மிகப் பெரிய ஆவுடையார் உள்ளிட்ட சிவலிங்க பாகங்கள் நந்தி போன்றன மீட்கப்பட்டு இருந்ததையும் மேனாட்டு தொல்லியல் அறிஞர்களான எச். பி.பெல், லூயிஸ் ஆகியோர் கடந்த நூற்றாண்டிலேயே அகழ்வாராய்ச்சிகளுடன் உறுதிப்படுத்தி இருந்தனர்.

இந்நிலையில் இன்றும் முற்றிலும் சைவத்தமிழர் வசிக்கும் இடத்தில் அவர்களின் வழிபாட்டுரிமைக்கு சவால் விடும் செயற்பாடுகளில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் அடாவடியாக ஈடுபட முனையும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீரசேகரவிற்கு நீதிமன்ற உத்தரவுகள் விசனத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

அதன் வெளிப்பாடே நாடாளுமன்ற சிறப்புரிமையை துஸ்பிரயோகம் செய்து  நீதிபதியை இனவாத நோக்கில் அவமதித்து அச்சுறுத்தும் வார்த்தை பிரயோகம் அடங்கிய அவரது உரையாகும்.

இன மத நல்லிணக்கத்தையும் உயரிய நீதிமன்ற மாண்பையும் காக்கும் வகையில் நாட்டின் சகல முற்போக்கு சக்திகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை பதிவு செய்ய வேண்டுவதுடன் கௌரவ சனாதிபதி சபாநாயகர் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் சைவத்தமிழ் மக்கள் சார்பாகவும் நீதிமன்ற மாண்பை மதிக்கும் நாட்டின் பிரசைகள் சார்பாகவும் வேண்டி நிற்கின்றோம்.- என்றுள்ளது.

### களத்தில் இறங்கி போராடும்...

முனைகின்றது. தொழிலார்களிற்கு எதிராக முன்னதாகவே, அவர்களின் இ.பி.எப், இ.ரி.எப் தொடர்பான பானங்கள், வட்டி வீதங் கள் அனைத்தும் முரண்பட்டு அனைவரும் அதிருப்தியடைந்திருக்கும் சூழலில் தொழிலார்களிற்கு எதிரான ஒரு சட்டத்தை கொண்டு வந்து நிர்கதிக்கு தள்ளுமானால் அடக்கு முறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு அவர்களின் நலன்களை முன்னிறுத்தி வீதியில் இறங்கி போராடும்.

தமிழினத்தின் பிரச்சினைகளை கடந்த சுதந்திர தினத்திற்கு முன்னதாக தீர்த்து வைப்பதாக உறுதி கூறிய ஜனாதிபதி, அடுத்த சுதந்திர தினமும் வரவுள்ள நிலையில் அதனை தீர்த்து வைப்பர் என்ற நம்பிக்கை எமக்கில்லை.

ஜனாதிபதி, ஒரு சில அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் பெயரில் விட முனையும் அதே வேளை ஐக்கிய நாடுகள் சபையை ஏமாற்றுவதற்காக ஓரிரு அரசியல் கைதிகளை விட்டு, தமிழரசு கட்சியை அழைத்து கதைப்பதாக நாடகமாடுகின்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மீது, திலீபனின் நினைவு தினத்திற்கு விளக்கு கொளுத்தியதற்காக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் ஒரு வழக்கை போட்டு

சிவாஜிலிங்கத்தின் நின்மதியை கெடுத்து அவரை அவல நிலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

சிவாஜிலிங்கத்திற்கு எதிராக பயங்கர வாத தடை சட்டத்தின் ஊடாக வழக்கை பதிவு செய்துள்ள இந்த விடயத்தை ஜனாதிபதியுடன் கதைத்து அதை ரத்து செய்ய முயல வேண்டும்.

இவ்வாறு செய்வதன் ஊடக போராடும் சக்திகளை அச்சுறுத்தி போராட்ட களத்திலிருந்து விரட்ட முன்வருகின்றனர்.

வடக்கு , கிழக்கு, மலையக தொழிலாளர்கள் படுகின்ற துன்பம் கொஞ்சமல்ல. தனியார் துறை தொழிலாளர்களிற்கு கொரோனாவிற்கு பின் எந்தவிதமான கொடுப்பனவும்  வழங்கப்படவில்லை.

கொரோனாவிற்கு முன் 3 நேரங்களும் உண்டவர்கள் மானத்தை காப்பதற்காக வயிற்றை கட்டி வாழும் அவர்களிற்காக தனியார் முதலாளிகளும் அக்கறை கொள்ளவில்லை என தெரிவித்தார்.


ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069


சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004


காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025


STUDIO
Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL
PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.